**Puducherry / Regional Bulletin / Tamil /18.10hrs / 20.04.2026 / Script**

**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : நாராயணசாமி**

**தேதி : 20.04.2026 – திங்கட்கிழமை** **நேரம் : மாலை 6.10 மணி**

---

*தலைப்புச் செய்திகள்*

குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், இலங்கைக்கான தமது 2 நாள் அரசுமுறைப் பயணத்தை இன்று நிறைவு செய்தார்.

பிரதமர் நரேந்திர மோடி, ராஜஸ்தானில் ஒருங்கிணைந்த எண்ணெய் சுத்திகரிப்பு மற்றும் பெட்ரோ கெமிக்கல் வளாகத்தை நாளை நாட்டுக்கு அர்ப்பணிக்கிறார்.

தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு.அஜித் தோவல், சவுதி அரேபியாவின் முக்கிய தலைவர்களுடன் இருதரப்பு பேச்சு வார்த்தை நடத்தியுள்ளார்.

காரைக்காலில் இயங்கி வரும் அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் 2026-27ஆம் கல்வியாண்டிற்கான மாணவர் சேர்க்கை தொடங்கியுள்ளது.

*குடியரசு துணைத் தலைவர் (03)*

குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், இலங்கைக்கான தமது 2 நாள் அரசுமுறைப் பயணத்தை இன்று நிறைவு செய்தார். இது குறித்த கூடுதல் தகவல்கள்... **(வாய்ஸ்)**

*குடியரசு துணைத் தலைவர் -2 (15)*

**(வாய்ஸ்)**

இலங்கைப் பயணத்தின் போது, இன்று நுவரெலியாவிற்குச் சென்ற திரு. ராதாகிருஷ்ணன் அங்கு ராகலாவில் உள்ள Liddlesdale estate-ல் இந்திய வீட்டு வசதி திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட வீடுகளைப் பார்வையிட்டு, பயனாளிகளுடன் கலந்துரையாடினார். வடக்கு, கிழக்கு மற்றும் தோட்டப்பகுதிகளில் ஏற்கனவே 50 ஆயிரம் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளதாகவும், 4ஆம் கட்டத்தின் கீழ் கூடுதலாக 10ஆயிரம் வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளதாகவும், குறிப்பிட்ட அவர், இந்திய வம்சாவளி தமிழ் சமூகங்களின் நலனில் இந்தியாவின் உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்தினார்.

முன்னதாக, நேற்று கொழும்பு சென்ற திரு. ராதாகிருஷ்ணன், அந்நாட்டு அதிபர் திரு. அனுர குமார திசநாயகே மற்றும் பிரதமர் திருமதி ஹரிணி அமர சூர்ய ஆகியோருடன் இருதரப்பு ஒத்துழைப்பு மற்றம்

உறவுகளை மேம்படுத்துவது குறித்து கலந்துரையாடினார். மேலும், அங்கு நடைபெற்ற சமூக நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட அவர், இந்தியா, இலங்கைக்கு வழங்கவுள்ள நலத்திட்ட உதவிகள் குறித்து அறிவித்தார்.

*குடியரசு துணைத் தலைவர் -3 (09)*

அந்த வகையில் முதன்மைத் திட்டமான இந்திய வீட்டு வசதி திட்டத்தின் 3ஆம் கட்டப் பணிகள் நிறைவடைந்ததைக் குறிக்கும் வகையில் தொகுப்பு வீடுகளை பயனாளிகளுக்கு வழங்கினார்.

நுவரெலியாவில் அமைந்துள்ள, சீதா அம்மன் கோவில் மற்றும் அனுமன் கோவிலையும் தரிசித்த குடியரசு துணைத் தலைவர், இருநாடுகளுக்கும் இடையே கலாச்சார தொடர்புகள் இருப்பதை நினைவுகூர்ந்தார். இக்கோவில்களின் புனரமைப்புக்கு ஆதரவு அளிப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி அறிவித்ததையும் திரு. ராதாகிருஷ்ணன் குறிப்பிட்டார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி புதுடெல்லியில் இன்று தென் கொரிய அதிபர் திரு. Lee Jae Myung-உடன் உயர்மட்ட அளவிலான பேச்சுவார்த்தை நடத்தினார். இந்த சந்திப்பின்போது, இரு நாடுகளுக்கிடையே விளையாட்டு மற்றும் கலாச்சாரம், ஆக்கப்பூர்வ தொழில்கள் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்தும் வகையில் 4 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. பின்னர், நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது, ஜனநாயக விழுமியங்கள், சந்தைப் பொருளாதாரம் மற்றும் சட்டத்தின் ஆட்சிக்கு மதிப்பளித்தல் ஆகியவை இரு நாடுகளில் மரபணுவிலேயே ஊறிப்போயுள்ளதாக பிரதமர் தெரிவித்தார். இந்தோ பசிபிக் பிராந்தியம் குறித்த விஷயத்தில் இரு நாடுகளும் ஒரே மாதிரியான அணுகு முறையைக் கொண்டுள்ளதாகவும் பிரதமர் கூறினார். மேலும், கடந்த 10 ஆண்டுகளில் தென் கொரியாவுடனான உறவு விரிவானதாகவும், துடிப்பானதாகவும் வளர்ந்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி குறிப்பிட்டார். இந்த செய்தியாளர் கூட்டத்தில் பேசிய தென் கொரிய அதிபர் திரு. Lee Jae Myung உலகின் தென்பகுதியில் இந்தியா தலைமைப் பண்பை பெற்றுள்ளது என்றும், பாதுகாப்பு, செயற்கை நுண்ணறிவு மற்றும் கப்பல் கட்டுமானம் ஆகிய துறைகளில் இரு நாடுகளும் ஒத்துழைப்பை வரிவுபடுத்தவுள்ளதாகவும் கூறினார்.

*பிரதமர் கொரியா – 2 (07)*

முன்னதாக, இன்று குடியரசு தலைவர் மாளிகையில் தென் கொரிய அதிபருக்கு நம் நாட்டின் பாரம்பரிய சிவப்புக் கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது. குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு. நரேந்திர மோடி, வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் ஆகியோர், வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். தமது இந்தியப் பயணத்தின் ஒரு பகுதியாக தென் கொரிய அதிபர் டெல்லி ராஜ்காட்டிலுள்ள மகாத்மா காந்தி நினைவிடத்தில் மலரஞ்சலி செலுத்தினார்.

*மோடி – ராஜஸ்தான் (17)*

பிரதமர் நரேந்திர மோடி, ராஜஸ்தான் மாநிலம், Balotra மாவட்டத்தில் உள்ள Pachpadra-வில், அமைந்துள்ள நாட்டின் முதலாவது Greenfield ஒருங்கிணைந்த எண்ணெய் சுத்திகரிப்பு மற்றும் பெட்ரோ கெமிக்கல் வளாகத்தை நாளை நாட்டுக்கு அர்ப்பணித்து, உரையாற்றவுள்ளார். ஆண்டுக்கு ஒன்பது மில்லியன் மெட்ரிக் டன்கள் உற்பத்தித் திறன் கொண்ட இந்த சுத்திகரிப்பு மற்றும் பெட்ரோ கெமிக்கல் வளாகம், 79 கோடி ரூபாய்க்கும் அதிகமான முதலீட்டில் நிறுவப்பட்டுள்ளது.

வரலாற்றுச் சிறப்புமிக்க இத்திட்டம், நாட்டின் எரிசக்தி மற்றும் பெட்ரோ கெமிக்கல் துறையில் ஒரு முக்கிய மைல்கல்லாக விளங்குகிறது. நாட்டின் எரிசக்தி பாதுகாப்பை வலுப்படுத்துவதிலும், பெட்ரோ கெமிக்கல் துறையில் தன்னிறைவை மேம்படுத்துவதிலும் மற்றும் தொழில்துறை வளர்ச்சியை முன்னெடுத்து செல்வதிலும் இத்திட்டம் ஒரு முக்கியப் பங்காற்றும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம், சமூக-பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களிக்கும் வகையில், குறிப்பிடத்தக்க வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் அமைந்துள்ளது.

*அஜித் தோவல் (09)*

சவுதி அரேபியா சென்றுள்ள தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு.அஜித் தோவல் அந்நாட்டின் முக்கிய தலைவர்களுடன் பாதுகாப்பு ஒத்துழைப்பு குறித்து பேச்சு வார்த்தை நடத்தியுள்ளார். மேற்காசிய போர் சூழல் காரணமாக, அப்பகுதியில் எரிபொருள் வர்த்தகத்திற்கு ஏற்பட்டுள்ள பாதிப்பை சரி செய்வது குறித்தும் அவர் பேச்சு வார்த்தை நடத்தினார். நேற்று சவுதி அரேபியா சென்ற திரு. அஜித் தோவலை ரியாத் சர்வதேச விமான நிலையத்தில் அந்நாட்டிற்கான இந்தியத் தூதர் திரு. சுகேல் அஜாஸ் கான் மற்றும் சவுதி அரேபிய அமைச்சர் திரு. Saud Al Sati உள்ளிட்டோர் வரவேற்றனர்.

*புதுச்சேரி சுகாதாரத் துறை -1 (04)*

கோடை காலத்தில் பொதுவாக பரவக்கூடிய தொற்று நோய்கள் பற்றி புதுச்சேரி, சுகாதாரத் துறை இயக்குநர் டாக்டர் செவ்வேள் பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் செய்திக்குறிப்பு வெளியிட்டுள்ளார். இது குறித்த தகவல்கள்...

**(வாய்ஸ்)**

*புதுச்சேரி சுகாதாரத் துறை-2 (14)*

**(வாய்ஸ்)**

கோடை வெப்பம் காரணமாக, ஹீட் ஸ்ட்ரோக் ஏற்பட்டால் ஐஸ் கட்டிகள், தண்ணீர் அல்லது குளிர்ந்த காற்றின் உதவியோடு உடலை வெளியில் இருந்து குளிர்வித்து முதலுதவி அளிக்க வேண்டும் என்றும், கொதிக்க வைத்து ஆற வைத்த சுத்தமான குடிநீரை பருக வேண்டும் என்றும், சுகாதாரமான முறையில் நன்கு சமைக்கப்பட்ட உணவுகளையே உண்ண வேண்டும். மேலும், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் முறையான சிகிச்சை முறைகளை மேற்கொள்வதன் மூலம் கோடை காலத்தில் வைரசால் ஏற்படும் கண் பாதிப்புகளிருந்து கண்களை பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்று கூறியுள்ளார். கோடை காலத்தில் மிக சாதாரணமாக ஏற்படும் பாதிப்புகளில் முக்கியமான ஒன்று நீரிழப்பு.

வெயில் காரணமாக மக்களுக்கு வியர்வையில் அதிக அளவு உப்பு சத்துக்கள் வீணாகிறது. இதை சரி செய்ய உப்பு கலந்த மோர் மற்றும் நீர் பானங்கள் அல்லது ஓஆர்எஸ் எனப்படும் உப்பு கரைசல் நீர் எடுப்பதன் மூலம் நீரிழப்பை தவிர்க்க முடியும் என்று அவர் அறிவுறுத்தியுள்ளார்.

*புதுச்சேரி சுகாதாரத் துறை -1 (08)*

அடிக்கடி கைகளை சுத்தமாக சோப்பு போட்டு கழுவுதல், தன்சுத்தம் பேணுதல், முகக்கவசம் அணிதல் போன்ற முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மூலம், வைரஸ் கிருமிகளால் குழந்தைகளுக்கு ஏற்படும் சளி, ஃப்ளு அம்மை உள்ளிட்ட தொற்று நோய்களிலிருந்தும் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறினார். இது சம்பந்தமாக பாதிக்கப்பட்டவர்கள் அருகில் உள்ள அரசு மருத்துவமனை அல்லது ஆரம்ப சுகாதார மையத்தை அணுகி சிகிச்சை பெறலாம் என்றும் கூறினார்.

*காரைக்கால் - பள்ளி (14)*

காரைக்காலிலுள்ள அரசு மேல்நிலைப் பள்ளிகளில் 2026-27ஆம் கல்வியாண்டிற்கான பதினொன்றாம் வகுப்பு மாணவர் சேர்க்கை குறித்து செய்திக்குறிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவ-மாணவியர், இதற்கான

விண்ணப்பங்களை இன்று தொடங்கி அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும் பெற்றுக்கொள்ளலாம் எனவும், பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை வரும் 30-ஆம் தேதிக்குள் அந்தந்த பள்ளிகளிலேயே சமர்ப்பிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், அரசு உதவிபெறும் மற்றும் தனியார் பள்ளி மாணவர்களுக்கு அவர்களின் மாநில கல்வி வாரிய தேர்வு முடிவுகள் வெளியான பிறகு சேர்க்கை குறித்த அறிவிப்பு வெளியாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் விவரங்கள் மற்றும் சேர்க்கை விதிகளை மாணவர்கள் தாங்கள் சேர விரும்பும் பள்ளிகளிலேயே கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் எனவும் காரைக்கால் மாவட்ட கல்வித்துறை துணை இயக்குநர் அலுவலகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*காரைக்கால் பாலிடெக்னிக் (15)*

காரைக்காலில் இயங்கி வரும் அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் 2026-27-ஆம் கல்வியாண்டிற்கான மாணவர் சேர்க்கை தொடங்கியுள்ளது. சிவில், மெக்கானிக்கல், எலக்ட்ரிக்கல், எலக்ட்ரானிக்ஸ், இன்பர்மேஷன் டெக்னாலஜி மற்றும் கம்ப்யூட்டர் இன்ஜினியரிங் போன்ற பல்வேறு பட்டயப் பாடப்பிரிவுகள் வழங்கப்படுகின்றன. புதுச்சேரி மாநில மாணவர்களுக்கு 2,265 ரூபாயும், பிற மாநில மாணவர்களுக்கு 6,765 ரூபாயும் மிகக் குறைந்த கல்விக்கட்டணமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அரசு உதவித்தொகை, இலவச பேருந்து வசதி, தரமான ஆய்வகங்கள்

மற்றும் நூறு சதவீத வேலைவாய்ப்பு வழிகாட்டுதல் போன்ற சிறப்பம்சங்களைக் கொண்ட இந்த கல்லூரியில் விண்ணப்பிக்க விரும்புவோர், இரண்டாம் ஆண்டு நேரடி சேர்க்கைக்கு ஜூன் 5-ஆம் தேதிக்குள்ளும், முதலாம் ஆண்டு சேர்க்கைக்கு ஜூன் 30-ஆம் தேதிக்குள்ளும் விண்ணப்பிக்க வேண்டும் எனவும், கூடுதல் விவரங்களுக்கு 04368-265521 என்ற எண்ணைத் தொடர்பு கொள்ளலாம் எனவும் கல்லூரியின் முதல்வர் முனைவர் சந்தனசாமி தெரிவித்துள்ளார்.

*ஸ்போர்ட்ஸ் (06)*

ஐபிஎல் கிரிக்கெட் போட்டித் தொடரில் அகமதாபாத்தில் இன்றிரவு 7.30 மணிக்குத் தொடங்கவுள்ள ஆட்டத்தில் குஜராத் டைட்டன்ஸ் அணி மும்பை இண்டியன்ஸ் அணியை எதிர்கொள்கிறது.

ஜெர்மனியில் நடைபெற்ற சர்வதேச ஸ்கேட்டிங் போட்டியில் இந்தியாவின் ஆனந்த்குமார் வேல்குமார் சீனியர் ஆடவர் பிரிவில் ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளார்.

*தமிழக தேர்தல் (13)*

தமிழகத்தில் 234 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு வரும் 23ஆம் தேதி நடைபெறவுள்ள தேர்தலுக்கான பிரச்சாரம் நாளை மாலையுடன் முடிவடையவுள்ள நிலையில், அரசியல் கட்சித் தலைவர்கள், உச்ச கட்ட வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

வரும் வியாழக்கிழமை காலை 7 மணிக்குத் தொடங்கி மாலை 6 மணி வரை வாக்குப்பதிவு நடைபெறும் என்று மாநில தலைமை தேர்தல் அதிகாரி திருமதி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார். சென்னையில் இன்று அவர் வெளியிட்ட அறிக்கையில் நாளை மாலை 6 மணி முதல் வாக்குப்பதிவு முடியும் வரை தேர்தல் தொடர்பான எந்தவொரு பொதுக்கூட்டமோ, ஊர்வலமோ நடத்தப்படக்கூடாதுஎ ன்று அறிவுறுத்தியுள்ளார். தொகுதிக்கு வெளியிலிருந்து அழைத்து வரப்பட்ட அரசியல் கட்சி நிர்வாகிகள், பணியாளர்கள் நாளை மாலை 6 மணிக்கு மேல் அத்தொகுதிகளை விட்டு வெளியேற வேண்டும் என்று தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், இலங்கைக்கான தமது 2 நாள் அரசுமுறைப் பயணத்தை இன்று நிறைவு செய்தார்.

பிரதமர் நரேந்திர மோடி, ராஜஸ்தானில் ஒருங்கிணைந்த எண்ணெய் சுத்திகரிப்பு மற்றும் பெட்ரோ கெமிக்கல் வளாகத்தை நாளை நாட்டுக்கு அர்ப்பணிக்கிறார்.

தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு.அஜித் தோவல், சவுதி அரேபியாவின் முக்கிய தலைவர்களுடன் இருதரப்பு பேச்சு வார்த்தை நடத்தியுள்ளார்.

காரைக்காலில் இயங்கி வரும் அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் 2026-27ஆம் கல்வியாண்டிற்கான மாணவர் சேர்க்கை தொடங்கியுள்ளது.